[1st April 1963

கைத்தொழில்களை அவரிடம் சொல்ல மூலப்பொருள் கிடைக்காத இடங்களில் கூட அந்தக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு பெரிய நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறார்களே, அது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எனக்கு அந்த விவரம் தெரியாது. ஆனால், அந்த விதமாகச் செய்வதை நான் குறை கூற மாட்டேன். ஏனெனில், லாபம் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற பிறகுதான் தொழில் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால் அது நீந்தத் தெரிந்த பிறகுதான் தண்ணீரில் இறங்கும் நிலையாகும். நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய தொழில் பிற்போக்கு நிலையில் பல முயற்சிகள் செய்யவேண்டும். அதில் லாப நஷ்டம் ஏதாவது வந்தால் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறது.

ஆறுகள் தூர் எடுத்தல் (தஞ்சை மாவட்டம்)

* 492 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், ஆறுகள் தூர் எடுத்து, வடிகால் வசதி செய்து கொடுக்க திட்டமுள்ளதா ?

(இ) உண்டென்றால், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) : There is no proposal for the silt clearance of rivers in Thanjavur District. Provision of drainage facilities is being attended to where and when found necessary.

திரு. ஆ. கு. சுப்பையா : பல ஆண்டுகளாகவே இம்மாதிரி வடி கால் வசதி இல்லாமல் தஞ்சையில் உள்ள கிராமங்கள் பாதிக்கப் படுகின்றன. ஆகவே, ஒவ்வொரு தாலூகாவாக எடுத்துக்கொண்டு இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : வடிகால் பிரச்னையைப் பொறுத்த மட்டில் இப்போதுள்ள திட்டங்களின்படி மண் வார நடைமுறை யில் திட்டங்கள் இருக்கின்றன. அதை மொத்தமாகச் செய்ய வேண்டுமென்பது கனம் அங்கத்தினர் ஆலோசனையும், என் கருத்தும் கூட, இதற்குத் தஞ்சை ஜில்லாவில் உள்ள பாசன வசதிகள் எப்படியிருக்கின்றன என்று பார்த்து விசேஷ ஏற் பாடுகள் செய்திருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு ஃபேஸ்டு ப்ரோக்கிராமாக எடுக்கவேண்டும் என்பது என் நினைப்பு.

திரு. எம். தண்டாயுதபாணி : ஆறுகளில் தூர் எடுக்கா விட்டாலும் கல்லணைக் கால்வாய்த் தலைப்பிலாவது தூர் எடுக்கத் திட்டம் அமுல் நடத்தப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போதுள்ள முறைப்படி, அப் போதைக்கப்போது இந்த கஷ்டங்கள் வரும்போது நீக்கிக்

1st April 1963]

கொண்டிருக்கிறார்கள். இதைப் பெரிய திட்டமாகச் செய்யவேண்டு மென்ற கருத்தை அங்குள்ள விவசாயிகள் சொல்வதால் ஆராய்ந்து நல்ல திட்டமாக அமைக்கவேண்டும். அரசாங்கம் அதற்கான முயற்சியைச் செய்யும்.

படிப்பு உதவித்தொகை (பிற்பட்ட வகுப்பு மாணாக்கர்)

*493 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த கல்லூரி மாணவர்களுக்கு எந்த அடிப்படையில் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன்: மிகப் பின்னிலே வகுப்பினர்கள் உட்பட பின்னிலே வகுப்பினருக்கு மேற்படிப்பிற்கான (Post-Matric) உபகாரச் சம்பளங்கள் மாநில நிதிகளிலிருந்தும் இதற்கென இந்திய அரசாங்கம் ஆண்டுக்கு ஆண்டு தனியாக ஒதுக்கும் நிதியிலிருந்தும் வழங்கப்படுகின்றன. மாநில அரசாங்க உபகாரச் சம்பளங்களை வழங்குவதற்கான நிபந்தனைகளாவன—

(1) பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமானம் 1,500 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது.

(2) பின்னிலே வகுப்பு மாணவர்கள் 50 சதவித மார்க்குகள் அல்லது அதற்கு மேற்பட்ட மார்க்குகள் வாங்கவேண்டும், மிகப் பின்னிலே வகுப்பு மாணவர்கள் 45 சதவித மார்க்குகள் அல்லது அதற்கு மேற்பட்ட மார்க்குகள் வாங்கவேண்டும்.

(3) இந்த நிபந்தனைகட்கு உட்படாமலுள்ள ஆனால் உபகாரச் சம்பளம் பெறுவதற்கேற்ற சில மாணவர்களுக்கு யுக்தப்படி உபகாரச் சம்பளம் வழங்க மொத்த உதவித் தொகையில் சுமார் 10 சதவிதம் ஒதுக்கப்படுகிறது. மாவட்டங்களில் மாவட்ட நல அதிகாரிகளும், சென்னை நகரில் ஹரிஜன நல டைரக்டரின் நேர் உதவி அலுவலரும் இவ்வாறு யுக்தப்படி உபகாரச் சம்பளம் வழங்கலாம்.

இந்திய அரசாங்க உபகாரச் சம்பளங்கள் பெறுவதற்கு மனுதாரர்களுடைய பெற்றோர்களின் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய்க்கு மேற்படக்கூடாது. மிக அதிக மார்க்குகள் வாங்கும் மாணவர்களுக்கே இந்த உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்திய அரசாங்கம் இதற்கென்று ஆண்டுதோறும் பிரத்தியேகமாய் ஒதுக்கும் நிதி வரையறைக்குள் இவை கொடுக்கப்படுகின்றன.

Scholarships to Backward Classes including most Backward Classes for post-Matric courses are granted from out of State funds as well as the allotment specially made by the Government of India year after year. Conditions governing the grant of State scholarships are as follows:—

(1) The annual income of the parents or guardians should not exceed Rs. 1,500 per annum.